வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 3973 / அ4 / 2022 நாள் 07– 01 – 2022

பொருள் பள்ளிக்கல்வி – 2021 –2022 ம் ஆண்டு ஆசிரியர்கள் பொது மாறுதல் சார்பான விண்ணப்பங்ளை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அதன் பிரதி ஒன்று மற்றும் விண்ணப்பம் – ஒப்படைக்க அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க எண் 25154 / அ1 / இ2 / 2021 நாள் 06–01–2022

....

பார்வையில் காணும் செயல்முறை கடிதம் தக்க நடவடிக்கையின் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாறுதல் சார்பான விண்ணப்பங்களை (EMIS Online) கல்வி தகவல் மேலாண்மை முகமையில் பதிவேற்றம் எவ்வாறு செய்வது என்பது குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆசிரியர் மாறுதல் விண்ணப்பம் பதிவு செய்யும் வழிமுறையினை பின்பற்றி செயல்படுமாறு மாவட்டக் கல்வி அலுவலர் / அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்படி பள்ளிதலைமை ஆசிரியர் மாறுதலுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களின் விண்ணபத்தினை Approval செய்யப்பட்ட பின்னர் அதனை மூன்று நகல்கள் எடுத்து ஒன்றினை சார்ந்த ஆசிரியருக்கு சார்பு செய்துவிட்டு மற்றோரு பிரதி மற்றும் விண்ணபத்தினை வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் 08–01–2022 அன்றுக்குள் ஒப்படைக்க வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் / அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆசிரியர்களின் விவரங்கள் இணையதளத்தில் Approval செய்வதற்குமுன் அரசாணையில் தெரிவித்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி ஆசிரியர்களின் சரியான விவரங்கள் உறுதி செய்த பின்னர் Approval செய்யப்படவேண்டும். தவறான விவரங்கள் Approval செய்யப்பட்டிருந்தால் சார்ந்த தலைமை ஆசிரியர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு
பார்வையில் காணும் கடிதம்

ஒப்பம் (க. முனுசாமி)
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் / அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.